நிறைய நடைபெற்று இருக்கின்றன. விருதுநகருக்கும் சிவகாசிக்கும் போனால் ஒரு நேஷனல் ஹைவேஸ் ரோட்டில் போவது போன்ற உணர்வு இருக்கிறது. ஆகவே வெகு சீக்கிரமாக திரு. பாலகங்காதரன் அவர்கள் கலெக்டர் ஆபிஸ்க்கு எல்லாம் வந்து விடுகிறார். ஒரு மணி நேரத்தில் வருபவர் 20 நிமிடத்தில் வருகிறார். ஆகவே அந்தப்பகுதியில் நிறையப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இருக்கிற பிரச்சினை எலலாம் பணப்பிரச்சினை காரணமாகத் தான், நிதிப் பிரச்சினைக் காரணமாகத்தான் அவைகளை எல்லாம் பெரிய திட்டங்களை எல்லாம் உடனே எடுக்க முடியவில்லை. இருந்தாலும் இந்த சூழ்நிலையைக் கருதி எதிர்காலத்தில் பகுதி-2 திட்டம் அல்லது ஏதாவது. உலக வங்கியிடமிருந்து வருகிற திட்டம் இதுபோன்ற திட்டங்களில் அரசு பரிசீலிக்கும் என்று இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 429, டாக்டர் பீட்ரிக்ஸ் டி' சோசா, மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்.

429—

ESTABLISHMENT OF RENTAL COLONIES THROUGHOUT THE STATE

*** 22881—Dr. Beatrix D'souza:**

Will the Hon. the Minister for Housing and Urban Development be pleased to State—

Whether there is a proposal with the Government to set up senior citizens rental colonies Throughout the State?

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

முற்பகல் 10.35

Dr. BEATRIX D' SOUZA: Hon. Speaker, Sir, Countries around the world are now witnessing a population boom. Though the birth rate is falling, the population has been increasing right from the `seventies. Obviously, there is no problem for the rich people because they have their own houses. The poor

people have the old-age homes run by the Government. Moreover, they have a better sense of social responsibility and, so, they look after their own people. Therefore, it is only the middle-class people who face the problem. With the breakdown of the joint family system, most children do no want to keep their parents with them. Mostly, people belonging to the salaried classes are affected. I feel that, sooner rather than later, Government will have to address themselves to this issue and it cannot be avoided. In the meantime, will the Government come forward to provide better quality housing, on a priority basis, to our senior citizens?

மாண்புமிகு திரு. சே. ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதியவர்களுக்கென்று வாடகைக் குடியிருப்புகள் எதுவும் தனியாகக் கட்டப்படுவது கிடையாது. இருந்தாலும் அரசு ஒதுக்கீட்டிலே இன்றைக்கு சென்னை, திருச்சி, ஈரோடு, மற்றும் கோயம்புத்தூர் போன்ற நகரங்களிலே அரசு ஊழியர்களுக்காகக் கட்டப்படுகிற வாடகைக் குடியிருப்புகளைப் போல, பொதுமக்களுக்காக பப்ளிக் கோட்டா என்று சொல்லப்படுகின்ற வாடகைக் குடியிருப்புகள் உள்ளன. அவை மொத்தம் 1198 குடியிருப்புகள் பொது மக்களுக்காக இந்த 4 இடங்களிலே இருக்கின்றன. அவைகள் பொதுமக்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும் தங்களுடைய பெயர்களைப் பதிவு செய்து, அவர்களுடைய சீனியாரிட்டி அடிப்படையிலே ஆண்டுதோறும் அவர்கள் பெற்றுக் கொள்கிறார்கள். இருந்தாலும் பொது மக்களுக்காக பப்ளிக் கோட்டாவில் ஒதுக்கப்படுகின்ற வாடகைக் குடியிருப்புகள் அடிக்கடி காலி செய்யப்படுவது கிடையாது. ஒருவருக்கு ஒதுக்கிவிட்டால் அவர்கள் பல்லாண்டு காலம் அங்கேயே குடியிருக்கிறார்கள். எனவே, இப்படிப்பட்ட பிரச்சினைகள் இருக்கிற காரணத்தினாலே முதியவர்களுக்கென்று தனியாக இட ஒதுக்கீடு செய்வதற்கு எந்தவிதமான ரிசர்வேஷனும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

Dr. JAISON JACOB: Hon. Speaker, Sir, as the hon.Member Dr. D'Souza said, we have, in our State, Homes for the Aged maintained by the Social Welfare Department. But as far as the Housing Board is concerned, are there any homes meant exclusively for the aged people? If not, will the Hon. Minister come forward to start such homes, through the Housing Board, on a payment basis?

மாண்புமிகு திரு. சே. ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதைத்தான் நான் ஏற்கெனவே குறிப்பிட்டேன். முதியவர்களுக்கென்று தமிழக அரசினுடைய வாடகைக் குடியிருப்புகள் எதுவும் தனியாகக் கட்டப்படுவதில்லை. அப்படி கட்டப்படுவதற்கான

எந்தவிதமான வாய்ப்புகளும் இப்போது கிடையாது. இருந்தாலும் பொது மக்களுக்காக இருக்கக் கூடிய பப்ளிக் கோட்டாவில் அவர்களும் மனு செய்து பெற்றுக்கொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வி. கே. சின்னசாமி.

திரு. வி.கே. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு குடும்பத்தில் இருக்கின்ற பிள்ளைக்கு திருமணம் ஆகிவிடுமேயானால் மருமகள் வந்துவிட்டால், மாமியாரையும் மாமனாரையும் வீட்டிலிருந்து விலக்கி வைக்கிற நிகழ்ச்சி பல இடங்களிலே நடக்கிறது. சினிமாவிலும், டி.வி.-யிலும் கூட அப்படிக் காண்பிக்கிறார்கள். ஆகவே, அப்படிப்பட்ட குடும்பங்களில் உள்ள பெரியவர்களுக்காக, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வீட்டுவசதி வாரியம் மூலம் வீடுகளைக் கட்டும்போது அந்த வீடுகளில் அப்படி விலக்கி வைக்கப்படுகின்ற அந்த முதியவர்களுக்கு ஏதாவது ஒரு சதவீதம் ஒதுக்கித் தருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சின்னசாமி அவர்களுக்கு இப்போதே பயம் வந்து விட்டது; மருமகள் வந்து விட்டால் நம்மை ஒதுக்கி விடுவார்களோ என்று. (சிரிப்பு)

மாண்புமிகு திரு. சே. ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு குடும்பமும் ஒற்றுமையாக இருக்கவேண்டுமென்றுதான் எல்லோரும் விரும்புவார்கள். அவர்களைப் பிரித்துப் பார்க்க யாரும் விரும்ப மாட்டார்கள். இருந்தாலும் முதியவர்களுக்கென்று தனியாக வீடுகளைக் கட்டி வாடகைக்கு விடுகிற திட்டம் எதுவுமே தற்போது அரசின் பரிசீலனையிலே கிடையாது. தமிழகத்தினுடைய நிதிநெருக்கடிக்கு இடையிலே இன்றைக்கு அரசு ஊழியர்களுக்கான வாடகைக் குடியிருப்புகள் கட்டிக் கொடுப்பதே மிகவும் குறைவாகத்தான் ஒவ்வொரு ஆண்டும் நாம் கட்டிக்கொண்டு இருக்கிறோம். இந்தச் சூழ்நிலையிலே முதியவர்களுக்கென்று தனியாக வீடுகட்டுவதற்குப் போதிய நிதி ஆதாரம் தற்போது வீட்டுவசதி வாரியத்திடம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி ப. சரஸ்வதி.

திருமதி ப. சரஸ்வதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது மாண்புமிகு சட்டப் பேரவை உறுப்பினர் அவர்கள், தாய் தந்தையர், மாமியார், மாமனார், ஆகியோரை விலக்கி வைப்பது பற்றிச் சொன்னார்கள். ஒவ்வொரு குடும்பத்திலும் ஒரு ஆண்மகன் திருமணம் செய்து கொண்டு தன்னுடைய மனைவியோடு தனிக் குடித்தனம் சென்று

அவர்கள்தான் தாய், தகப்பனாரை ஒதுக்கி வைக்கிறார்களேயொழிய, ஒரு பெண்ணைப் பெற்ற பெற்றோர்கள் எந்தக் காலத்திலும் கைவிடப்படுவதில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) காரணம், எங்கள் வீட்டிலேயே ஆண் மகன் இல்லை. நான் என்னுடைய தாயாரை கவனமாகக் காப்பாற்றி வருகின்றேன். ஆண் மகனைப் பெற்ற பெற்றோர்கள் எல்லாம் சாப்பாட்டுக்கு லாட்டரி அடிக்கக் கூடிய அளவுக்கு, பெண்கள் வீட்டிற்குச் சென்று.....:

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி. சரஸ்வதி, நீங்கள் சொல்வது இரண்டு விதமாகவும் பாதிக்கும், இப்போது நீங்கள் சொன்ன மாதிரி, பெண்பிள்ளைகள் தாய் தகப்பனைக் கவனிப்பது என்பது சரிதான். ஆனால் மாமியார், மாமனாரை விரட்டி விடுகிறார்கள் என்றுதான் உறுப்பினர் கேள்வி கேட்டார், இது வேண்டாம். திரு. சின்னசாமியினுடைய ஆதங்கம் வீட்டிற்கு வந்த மருமகளே மாமியார், மாமனாரை அனுப்பிவிடுவது. நீங்கள் சொல்வது உங்கள் அம்மா, அப்பாவைப் பார்த்துக் கொள்கிறீர்கள் என்பது. உங்கள் மாமனார், மாமியார் என்ன ஆனார்கள் என்பது பற்றிப் பிறகு அங்கே விசாரிக்க வேண்டிவரும் (சிரிப்பு)

முற்பகல் 10.40

திருமதி ப. சரஸ்வதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய மாமனார், மாமியாரை நான்தான் கண்ணும் கருத்துமாக பார்த்துக் கொண்டிருக்கிறேன். ஒவ்வொரு கணவரும்தான் பொறுப்பு ஏற்றுக்கொள்ள வேண்டுமேயொழிய, பெண்களை விரட்டுகின்ற ஆண் வர்க்கம் ஏன் பெற்றோர்களைப் பாதுகாக்கக் கூடாது என்பதுதான் என்னுடைய கேள்வி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதுதான்,நீங்களாகக் கேள்வி கேட்க வேண்டும். சமூகநலத் துறை அமைச்சர் சொல்லிக் கொடுத்த கேள்வி என்பதால்தான் தப்பாகப் போகிறது.

வினா எண் 430, திரு. சி. இராமசுவாமி, மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

430—

சங்கராபுரம் தொகுதியில் தொழிற்பேட்டை அமைத்தல்

*** 39467—**திரு. இராமசுவாமி :

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—